**கவனிக்க.**- 2016.08.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1980 - 2016 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2016.08.12

*1980 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1354* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1367* |


**கவனிக்க.**- நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்) சட்டமூலம் 2016, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, செத்தெம்பர் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

*தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) மற்றும் தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் ஆட்சேர்த்தல் - 2016*

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பகுதி 3 சேைவத் தரத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய அரச உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவி :**

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்க்கும் தரம் |
|---|---|---|---|
| 1 | தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) | 182 | III ஆம் தரம் |
| 2 | தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) | 19 | III ஆம் தரம் |

1.2 **பதவிக்குரிய கடமைகளின் தன்மை :**

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 1 | தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளரின் கண்காணிப்பின்கீழ் ஒதுக்கப்படும் செயற்பாடுகள் :<br>* இத்துறையில் உள்ள புதிய நிர்மாணங்கள், விஸ்தரிப்புகள் மற்றும் திருத்த வேலைகளில் வேலைகளை மேற்பார்வை செய்தல்<br>* நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட தரத்திற் கிணங்க அத்தகைய நடவடிக்கைகளின்போது வழங்கப்படும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்<br>* உரிய துறையில் நீர்ப்பாசனம் மற்றும் உயர்த்தல் நீர்ப்பாசனம், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற திட்டங்களில் செயற் படுத்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளை மேற்பார்வை செய்தல்<br>* நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய உயர்த்தல் நீர்ப்பாசனம், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் உவர் நீர் தடுப்புத் திட்டம், கட்டடம், பாதைகள் மற்றும் அவற்றுக்குரிய பாதுகாப்பு பற்றி கவனமாக இருத்தல் மற்றும் பாதுகாத்தல் |
| 2 | தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) | இயந்திரவியல் வேலைத்தளத்திற்கு பழுதுபார்த்தலுக்காக கொண்டுவரப்படும் வாகனங்களைப் பொறுப்பெடுத்தல்<br>இயந்திரவியல் பிரிவுக்கு நியமிக்கப்படும் கனிஷ்ட ஊழியர் களின் கடமைகளைக் கண்காணித்தல் |

2. **ஆட்சேர்க்கும் முறை :**

2.1 தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

2.2 *கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.-* விண்ணப்பதாரர்களுள் துறைகளுக்குரிய அனுபவம், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பரிசீலிப்பதற்கு நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தகுதியுடையோர் தெரிவுசெய்யப்படுவர் :

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்பு | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| அனுபவம், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் | 100 | 40 |

2.3 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையானது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் உப பிரிவு I இற்கிணங்க ரூபா 29,840 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 48,890 (MTI-2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இற்கிணங்க 2016.01.01 ஆந் திகதியிலிருந்து 2016.12.31 ஆந் திகதி வரை ஆரம்ப சம்பளமான ரூ. 17,508 மற்றும் ரூ. 9,831 கொடுப்பனவும் உரியதாகும்.

4. **சேவையின் தன்மை**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு வயது 18 இற்குக் குறையாமலிருக்க வேண்டும். அத்தோடு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

6. **தேவையான தகைமைகள் :**

6.1 *கல்வித் தகைமைகள்.-* தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்)/ தாக்சன சகாயக்க (இயந்திரவியல்).- கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

6.2 *அனுபவம்.-* தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்).- நீர்ப்பாசனத் திணைக்களத்தின் PL2-2006A சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கிணங்க PL2-2006A சம்பளக் குறியீடு) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர, ஓய்வூதியமுடைய, ஆரம்ப பகுதி தேர்ச்சி பெற்ற சேவைக்கணத்தின் பதவிக்கு குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம் இருப்பதோடு ஐந்து (5) வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. செயற்படுத்துநர்
2. ட்ரக்டர் இயக்குபவர்
3. பராமரிப்பு மற்றும் செயற்படுத்தும் தொழிலாளி
4. நீர்ப்பம்பி இயக்குநர்
5. வளி சீராக்கி உபகரணம் பழுதுபார்ப்பவர்
6. கொத்தர்
7. தச்சுத் தொழிலாளி
8. நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர்
9. உபகரண பொருத்துநர்
10. உபகரணங்களைப் பழுதுபார்ப்பவர்
11. நீரியல் அளவீட்டு உதவியாளர்
12. சுற்றுலாப் பயண பங்களா பொறுப்பாளர்
13. களஞ்சியசாலைப் பொறுப்பாளர்
14. திட்டமிடல் அச்சிபடுபவர்
15. திட்டமிடல் பொறுப்பாளர்
16. நேரக் கணிப்பீட்டு இயந்திரம் பழுதுபார்ப்பவர்

அல்லது

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருட பகுதி நேர தேசிய தொழில்நுட்ப சான்றுப்பத்திர (சிவில்) கற்கை நெறியில் சித்தியடைந்து உரிய சான்றிதழைப் (NCT - civil) பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அதற்குச் சமமான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் போன்ற தொழில்சார் தகைமைகளைப் பூர்த்திசெய்து குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள் தொடர்ச்சியானதும்

திருப்தியானதுமான சேவைக்காலத்தையுடைய அரச சேவையில் நிரந்தர நியமனத்தையுடைய உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

*தாக்சன சகாயக்க (இயந்திரவியல்).-* நீர்ப்பாசனத் திணைக்களத்தின் PL2-2006A சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கிணங்க PL2-2006A சம்பளக் குறியீடு) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர, ஓய்வூதியமுடைய, ஆரம்பப் பகுதி தேர்ச்சிபெற்ற சேவைக் கணத்தின் பதவிக்கு குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம் இருப்பதோடு ஐந்து (5) வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்தியானதுமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

1. தொழில்நுட்பவியலாளர்
2. மின் இயந்திரி
3. இணைப்பாளர்
4. வர்ணம் தீட்டுபவர்
5. துளையிடுபவர்
6. உலோக வேலையாள்
7. கொல்லர்
8. இயந்திரி
9. தகர வேலையாள்
10. பொருத்துநர்
11. சிறுவேலைப் பரிபாலகர்

அல்லது

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருட பகுதி நேர தேசிய தொழில்நுட்ப சான்றுப்பத்திர (சிவில்) கற்கைநெறியில் சித்தியடைந்து உரிய சான்றிதழைப் (NCT-Mechanical) பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அதற்குச் சமமான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் போன்ற தொழில்சார் தகைமைகளைப் பூர்த்திசெய்து குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்தியானதுமான சேவைக்காலத்தையுடைய அரச சேவையில் நிரந்தர நியமனத்தையுடைய உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

6.3 *பௌதீக தகைமைகள்.-* அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

6.4 *ஏனைய தகைமைகள் :*

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) அரச சேவையில் நிரந்தர நியமனத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iv) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்து தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

7. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் அது பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிருபிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிருபிக்கப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் :**

8.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 21 x 19 செ. மீ. (A4) அளவிலான கடதாசியை இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 7 வரையான தலைப்புகள் 1 ஆம் பக்கத்திலும் இலக்கம் 8 தொடக்கம் 11 வரை 2 ஆம் பக்கத்திலும் இலக்கம் 12 தொடக்கம் 16 வரை 3 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

8.2 அனைத்து விண்ணப்பங்களும் தமது நிறுவனத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8.3 குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8.4 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

8.5 **விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) பதவிக்கு ஆட்சேர்த்தல் அல்லது தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) பதவிக்கு ஆட்சேர்த்தல் - மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில்" எனத் தெளிவாகக் குறிப்பிடுக.**

9. இந்த வெற்றிடத்தை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடத்தில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுப்பது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

10. **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்.**- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒகத்து மாதம் 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழே காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 7.

பொறியியலாளர் எஸ். எஸ். எல். வீரசிங்க,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
2016, யூலை 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்/இயந்திரவியல்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

(அலுவலக உபயோகத்திற்கு)

1. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர்- திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : PERERA, A. B. C)

2.1 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. ஆண்/பெண் :
ஆண் - M
பெண் - F

5. அலுவலக முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

5.1 தனிப்பட்ட முகவரி :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

6. தொலைபேசி இலக்கம் :

நிலையான தொலைபேசி :

கையடக்கத் தொலைபேசி :

7. வதிவிடம் :

7.1 வதிவிட மாவட்டம் :----.
7.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.

8. குடியியல் நிலை :
திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2 ☐

9. பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

9.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது (2016.08.29) :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

10. பதவி :

10.1 தற்போது வகிக்கும் பதவி :----.
10.2 பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.

11. கல்வித் தகைமைகள் :

11.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :
முதலாம் அமர்வு :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

11.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :
இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

12. தொழில்சார் தகைமைகள் :

| மேற்கொண்டுள்ள கற்கைநெறி | வழங்கிய நிறுவனம் | கற்கைநெறிக்கான கால எல்லை | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |

13. அனுபவம் :----.

14. வேறு தகைமைகள் :----.

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

.................................. ஆகிய நான், இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகிறேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏதாவது பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பத் தகைமை நீக்கப்படுவதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டயீடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் நாட்டின் எப்பிரதேசத்திலும் நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றவும் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .......................................... பதவியில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவரின் வேலை, நடத்தை என்பன திருப்தியானது எனவும், அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை எனவும் அது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு கருதப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்பட்டால், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை.

திகதி :----.

8-297/1

---

## இலங்கை நிரந்தர கடற்படையில் பயிலிளவல் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர கடற்படையில் பயிலிளவல் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழகத்துடன் இணைந்த பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்காக கீழ்வரும் பிரிவுகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(1) நிர்வாகப் பிரிவு
(2) ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவு
(3) விநியோகப் பிரிவு
(4) எல்லைக்காவலர் பிரிவு

குறைந்தபட்சம் க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் திறமை சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பின்வரும் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு க.பொ.த (உ.த) பொது அறிவுப் பரீட்சையில் 30 புள்ளிகளுக்குக்

குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு க.பொ.த (உ.த) பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகத்தில் நுழைவதற்குத் தேவையான குறைந்தபட்சத் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

| | |
|---|---|
| (1) நிர்வாகப் பிரிவு | - பௌதீகவியல் அல்லது உயிரியல் பிரிவில் |
| (2) ஒழுக்காற்று பராமரிப்பாளர்/ எல்லைக்காவலர் பிரிவு | - விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பம் அல்லது கலைப் பிரிவில் |
| (3) வழங்கல் பிரிவு | - வர்த்தகப் பிரிவில் |

(ஆ) கடல்சார் பொறியியலாளர், மின் பொறியியளாலர் (உள்ளூர்/வெளியூர் பயிற்சி) பட்டங்களாக கீழ்குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(1) கடல்சார் பொறியியல் பிரிவு
(2) மின் பொறியியல் பிரிவு

குறைந்தபட்சம் க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் திறமை சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியலில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு க.பொ.த (உ.த) பொது அறிவுப் பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு க.பொ.த (உ.த) பரீட்சைக்கு அமைய பல்கலைக்கழகத்தில் நுழைவதற்குத் தேவையான குறைந்தபட்ச தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழிலின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

**குறிப்பு**.- க.பொ.த (சா.த) கல்வித்தகைமைக்கு விருப்பத்திற்குரிய பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டது.

3. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம்.- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.- 2016, ஒகத்து மாதம் 18 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம்.- 168 சென்றி மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டும் (ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவிற்கு 171 சென்றி மீற்றருக்கு குறையாதிருத்தல் வேண்டும்).

(ஈ) உடல் எடை.- 52 கிலோ கிராமிற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(உ) மார்பு.- 82 சென்றி மீற்றருக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- STD II.

(எ) தொலை பார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்).

(ஏ) குடியியல் நிலை.- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போது மற்றும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்குள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் முறையாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருப்பினும் கடற்படைக்கு நன்மை பயக்கும் விசேட தொழில்திறனைப் பெற்றிருப்பின் கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவரைப் பற்றிக் கவனத்தில் எடுக்கப்படும்.

*6. **சேவை நிபந்தனைகள் :***

*(அ) விண்ணப்பதாரிகள் ஏனைய பதவிகளைப் போன்று நிரந்தர கடற்படைச் சேவைக்காக பயிலிளவலாகச் சேர்க்கப்படுவதோடு அடிப்படை பயிற்சி நெறிகளுக்கும் உட்படுத்தப்படுவர். பயிலிளவல்கள் பெற்றிருக்கும் பிரிவிற்கமைய அடிப்படை பயிற்சி மற்றும் தொழில்சார் பயிற்சியினை நிறைவு செய்த பின் ஆரம்பத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் போது இருந்த பதவி மாற்றப்பட்டு பதில் கடமையாற்றும் துணை இடைநிலை அதிகாரி பதவியில் நிரந்தர ஆணையினைப் பெறுவர்.*

*(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் படி கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்படுவதற்கமைய இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கு பயிலிளவல்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.*

*(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் பயிலிளவல்கள் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.*

*(ஈ) ஒவ்வொருவருக்கும் சகல வகையான சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பன அளிக்கப்படும்.*

*(உ) பயிற்சிக் காலத்தின் போது பயிலிளவல்களுக்கு தங்குமிட வசதி மற்றும் கடற்படை உணவு விடுதியிலிருந்து உணவும் வழங்கப்படும்.*

*(ஊ) ஆணையினைப் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் ஏதேனுமோர் பயிலிளவல் தமது சுய விருப்பத்திற்கமைய பயிற்சியிலிருந்து விலகிக்கொள்ளுமிடத்து அப்பயிலிளவலுக்காக அதுவரையிலும் இலங்கை குடியரசினால் செய்த செலவுகள் அனைத்தையும் அந்த பயிலிளவலினால் இலங்கை குடியரசிற்கு மீளச்செலுத்துதல் வேண்டும்.*

*(எ) பயிற்சிக் காலத்தின் போது எந்த சந்தர்ப்பத்திலும் ஏதேனுமோர் பயிலிளவலின் துர்நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக் கூறவேண்டிய ஏதேனுமோர் காரணத்திற்காக அல்லது ஆணையினை வழங்குவதற்கு பொருத்தமற்றவரென பொறுப்பிலுள்ளவர்களினால் தீர்மானம் எடுக்கப்படுமேயானால் அப்பயிலிளவலுக்காக அதுவரையிலும் செய்த செலவுகள் அனைத்தையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை கடற்படைக்கு மீளச்செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கை குடியரசின் முகவரான கடற்படைத் தளபதியுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும்.*

*(ஏ) உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் அத்தினத்திலேயே அடிப்படை நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்படுவதோடு அதில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இரண்டாவது நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர். இரண்டாவது நேர்முகத்தேர்வில் தேர்ச்சியடையும் விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவதோடு அத்தேர்வில் கிடைக்கப்படுகின்ற புள்ளிகள் மற்றும் வெற்றிடங்களுக்கமைய அந்தந்த பிரிவுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரம் சேர்க்கப்படுவர்.*

*(ஐ) திருமணமாகிய அலுவலராயின், மணமானோர் குடிமனை வெற்றிடத்திற்கு அமைய வழங்கப்படும். இதற்கான வாடகை அரச சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று அறவிடப்படும்.*

*(ஒ) எல்லா அலுவலரும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.*

*(ஓ) சகல அலுவலர்களும் கடற்படைச் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுவர்.*

*7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலிளவல்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள மற்றும் இதன்பின்னர் விதிக்கப்படும் கட்டளைகளையும் உறுப்புரைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.*

*8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- 2016.01.01 ஆம் திகதியிலிருந்து இல 03/2016 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும். இதற்கமைய-*

| | | |
|---|---|---|
| *(அ) அடிப்படைச் சம்பளம்* | - | *ரூபா 32,380.00* |
| *(ஆ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு* | - | *ரூபா 7,800.00* |
| *(இ) சீருடை பேணுதல் கொடுப்பனவு* | - | *ரூபா 255.00* |
| *(ஈ) கடினப்படி (யுத்தப் பிரதேசங்களில்)* | - | *அடிப்படைப் பயிற்சியின் பின்னர் உரித்தாகும்.* |
| *(உ) கடினப்படி (யுத்தமற்ற பிரதேசங்களில்)* | - | *அடிப்படைப் பயிற்சியின் பின்னர் உரித்தாகும்.* |
| *(ஊ) ஏனைய கொடுப்பனவுகள்* | - | *விசேட கொடுப்பனவு ரூபா 1,000.00*<br>*விசேட மேலதிக் கொடுப்பனவு ரூபா 3,000.00* |

**குறிப்பு**.- பயிலிளவல் அலுவலர்களின் அடிப்படைச் சம்பளம் 2020.01.01 ஆந் திகதி ரூபா 32,380.00 என்பதோடு 2016.01.01 ஆந் திகதியிலிருந்து வருடாந்தம் அடிப்படைச் சம்பளத்தில் பின்வருமாறு மாற்றம் செய்யப்படும்.

2016.01.01 - ரூபா 18,984.00 - செம்மையாக்கல் கொடுப்பனவு ரூ. 6,429.00
2017.01.01 - ரூபா 22,333.00 - செம்மையாக்கல் கொடுப்பனவு ரூ. 6,429.00
2018.01.01 - ரூபா 25,682.00 - செம்மையாக்கல் கொடுப்பனவு ரூ. 3,080.00
2019.01.01 - ரூபா 29,031.00 - கிடையாது
2020.01.01 - ரூபா 32,380.00 - கிடையாது

(எ) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப் படி மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 செலுத்தப்படும்.

(ஏ) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு உரித்தாகும். (அலுவலருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும்).

(ஐ) முகாமில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை அலுவலர் விடுதியிலிருந்து சொந்த இருப்பிடத்திற்குப் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் கட்டணச் செலவின் மீளளிப்பு.

(ஒ) சீருடையும் அதற்கான ஏனைய பொருட்களும் இலவசமாக வழங்கப்படும்.

(ஓ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

(ஔ) அரசாங்க குடிமனையொன்றில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்கு மாதாந்தம் ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை வாடகைக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

9. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "சிரேஷ்ட பதவிநிலை அதிகாரி (ஆட்சேர்ப்பு), கடற்படை தலைமையகம், த. பெ. இல. 593, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் அலுவலர் பதவி" என குறித்தல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/சிவில் தாபனத்தில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/சிவில் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்டால் சேவையாற்றும் நிறுவனத்திலிருந்து விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது வேறு சந்தர்ப்பத்தில் அழைக்கப்படும் போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். :-

(1) பிறப்புச் சான்றிதழ் (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்).
(2) விண்ணப்பித்த பிரிவுக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.
(3) பாடசாலை விடுகைப் பத்திரம்.
(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.
(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/தொழில்நுட்பப் பயிற்சி அல்லது அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ்.
(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு குணநலச் சான்றிதழ்கள், அதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.
(7) விளையாட்டுத்துறைகள் மற்றும் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

(உ) வேறெந்த ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு கடற்படை பொறுப்பல்ல.

10. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரர் உள்ளாகுவர்.

11. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப் பரீட்சை போன்றன :**

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த தேர்வுநாடிகளுக்காக கடற்படையினால் நடாத்தப்படும் அடிப்படை மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ் குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு கடற்படைத் தளபதியினால் விதித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைகளுக்கு சமுகமளித்தல் வேண்டும். இதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட தேர்வுநாடிகள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுச் சபையின் நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்பட்டதன் மூலம் இறுதி தேர்வு செய்யப்படும்.

உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள் :

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடம்/செக்கன்) |
|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | - | 06 – 08 நிமிடத்திற்கிடையில் |
| Push up | 25 அல்லது அதைவிட கூடுதலாக | 02 நிமிடம் |
| Sit up | 25 அல்லது அதைவிட கூடுதலாக | 02 நிமிடம் |
| Arm Bending | 05 அல்லது அதைவிட கூடுதலாக | 02 நிமிடம் |
| Standing Board Jump | 242 cm அல்லது அதைவிட கூடுதலாக | - |
| Rope Climbing | - | - |
| Shuttle Run | - | 11 விநாடிகள் |

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்தமாகக் கூடியவரான தேர்வுநாடிகள் கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். விண்ணப்பதாரர் ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவை தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஆர்சி விஜேகுணரத்ன, டப்ளியூவி, ஆர்டப்ளியூபி, ஆர்எஸ்பீ,
விஎஸ்வி, யுஎஸ்பீ, என்டிசி, பிஎஸ்என்
துணை அட்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்
த. பெ. இல. 593,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## இலங்கை நிரந்தர கடற்படையில் பயிலிளவல் அலுவலர்களுக்கான விண்ணப்பம்

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக.)
2. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையின் படி) :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.
6. பிறந்த திகதி :----.
7. வயது (2016, ஓகத்து 31 ஆந் திகதியன்று) :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
8. உயரம் :----. (செ.மீ) மார்பு :----. (செ.மீ) எடை :----. (கி.கி)
9. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :----.
10. மாவட்டம் :----.
11. தேர்தல் தொகுதி :----.
12. கிராம அலுவலர் பிரிவு :----.
13. தொலைபேசி இலக்கம் :----.
14. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
15. பால் :----.
16. கல்வி கற்ற பாடசாலை :----.
17. பாடசாலை மற்றும் அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர் | பரீட்சையின் தன்மை | பரீட்சையின் ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

18. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

21. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

22. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

23. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

24. இலங்கை கடற்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்காக இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக. :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா அல்லது பிணையில் விடப்பட்டுள்ளீரா ? அப்படியாயின், விபரங்கள் தருக :----.

26. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது அரச துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

27. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

28. விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவின் படியும் விசுவாசத்தின் படியும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கடற்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து அறிந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-454

---

**இலங்கை பொலிஸ் சேமப்படை**

பொலிஸ் வைத்தியசாலை

**மருத்துவ உத்தியோகத்தர் வெற்றிடங்கள்**

பொலிஸ் வைத்தியசாலையில் நிலவும் மேற்கூறப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்களை கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்டு "ஆட்சேர்ப்புப்/ பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்புப் பிரிவு, இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை கொழும்பு 06" என்ற முகவரிக்கு 2016.09.09 ஆந் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் மேலே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தற்போது அரச சேவையிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. **கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :**

(அ) எம்.பி.பி.எஸ் (இலங்கை) அல்லது அதற்கிணையான மருத்துவ பட்டமும் இலங்கை மருத்துவ சபையில் நிரந்தர மற்றும் முழுப் பதிவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வைத்தியர் என்ற வகையில் விசேட பயிற்சி அல்லது அனுபவம் உள்ளவர்களுக்கு பொலிஸ் வைத்தியசாலையில் தேவைக்கேற்ப முன்னுரிமை வழங்கப்படும்.

4. **சம்பளம், வேறு கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் :**

(அ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்படும் வேதனத்தையும் உரிய ஆண்டேற்ற வேதனத்துடன் சகல கொடுப்பனவுகளையும் பெறுவர். இதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரர் பொலிஸ் சேமைப்படையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பெறும் வேறு கொடுப்பனவுகளுக்கும் உரித்துடைய வராவர்.

(ஆ) சேவைத் தேவைக்கேற்ப உத்தியோகபூர்வ வாகனத்துடன் சாரதியும் வழங்கப்படும்.

5. **சேவைநியதிகள் :**

(அ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை பொலிஸின் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேமப்படை உதவி பொலிஸ் அத்தியட்சகர்/ சேமப்படை பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் நியமிக்கப்படுவர்.

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், தற்போது சுகாதார திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளோரின் அச்சேவை மூப்பு தொடர்ச்சியாக பேணப்படும்.

(இ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஒரு வருட கால தகுதிகாண் நிலையில் சேவை செய்தல் வேண்டும் என்பதோடு நான்கு வருட காலம் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

6. **சேவை நிபந்தனைகள்.**- அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறைவிதிகளில் காணப்படும் பொது நிபந்தனைகளுக்கு புறம்பான நிபந்தனைகள் :

(அ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு தற்போது நடைமுறையிலுள்ள அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படும் ஏதேனும் விதிகள் இருப்பின் அவற்றிற்கு அமைவாகவும் செயற்படல் வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் படி, பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை இலக்கம் 1693/2003 மற்றும் 1804/2004க்கு அமைய பொலிஸ் ஒழுக்காற்று கோவையின்படி செயற்படுவதாக உறுதியுரை/ சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

(இ) அனைத்து விண்ணப்பதாரர்களும் அரசசேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளில் காணப்படும் பொது நிபந்தனைகள், தாபன விதிக்கோவையின் முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதிகளில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் அதற்கு புறம்பான சுற்றறிக்கைகள் மற்றும் நிபந்தனைகள், பொலிஸ் சேவை கட்டளைகள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு கட்டுப்படுகின்றனர்.

(ஈ) அனைத்து நியமனங்கள் தொடர்பிலும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1589/ 30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறைவிதிகளில் காணப்படும் நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

7. இந்த அரச வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமிப்பது தொடர்பில் அதற்குரிய பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

8. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனத்திற்கு முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். பொலிஸ் சேவைக்கு தகுதியற்ற விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவர்.

9. விண்ணப்பதாரர்கள் பின்வருவனவற்றின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். (மூலப்பிரதிகளை இணைத்தலாகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் தகைமைகள் குறித்த சான்றிதழ்கள் ;
(ஈ) தொழில்சார் அனுபவ சான்றிதழ்கள்.

10. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தை 11" x 8" அளவுடைய தாளில் தயாரித்து பூரணப்படுத்தி உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து மேலே இரண்டாம் பந்தியில் கொடுக்கப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பங்களை நேரடியாக திணைக்களத்திலுள்ள எந்தவொரு உத்தியோகத்தரிடமும் கையளித்தலாகாது.

**குறிப்பு.**- இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக காணப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்

கப்படும். இது சம்பந்தமாக பதில் அனுப்பப்பட மாட்டாது. அத்தோடு பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளுக்கு பயணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மாஅதிபர்.

மாதிரிவிண்ணப்பப்படிவம்

**பொலிஸ் வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கானது**

1. விண்ணப்பிக்கும் பதவி :----.

2. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துடன்) :----.

 (i) குடும்பப் பெயர் :----.
 (ii) வேறு பெயர்கள் :----.

3. நிரந்தர விலாசம் :----.

 அதற்குரிய பொலிஸ் நிலையம்:----.

4. பால் (ஆண்/ பெண்) :----.

5. பிறந்த திகதி :

 2016.09.09 ஆந் திகதியன்று வயது :

 வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. குடியியல் நிலை :

 திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ?/ தாரமிழந்தவரா ?

 (i) கணவனின் /மனைவியின் தொழில்:----.
 (ii) கணவன்/மனைவி தொழில் புரியும் இடம் :----.

7. தற்போதைய சேவை விபரம் :

 (i) தற்போது வகிக்கும் பதவி:----.
 (ii) தற்போது வகிக்கும் பதவிக்கான வகுப்பு :----.
 (iii) தற்போது சேவை செய்யும் இடம் :----.

8. நியமனம் பெற்ற திகதி:----.

 (i) தற்போதை பதவிக்கான நியமனத் திகதி:----.
 (ii) II ஆவது வகுப்புக்கு நியமனம் பெற்ற திகதி:----.
 (iii) முதலாவது நியமனத் திகதி :----.

9. கல்வித் தகைமைகள் (முழு விபரங்கள் திகதியுடன்):----.

 (i) தொழில்சார் தகைமைகள் :----.
 (ii) பட்டப்பின் படிப்பு:----.

10. வகித்த பதவிகள் :

| | பதவி | சேவை நிலையம் | சேவைக் காலம் |
|---|---|---|---|
| 1. | .................... | .................... | .................... |
| 2. | .................... | .................... | .................... |
| 3. | .................... | .................... | .................... |
| 4. | .................... | .................... | .................... |
| 5. | .................... | .................... | .................... |

11. சிறப்புத் தகைமைகளும் அனுபவமும் :----.

12. பதவிக்குரிய வேறு தகைமைகள் :----.

 மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் உறுதி செய்கின்றேன். என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் எவையேனும் பொய்யானது என தெரிவுசெய்யப்படும் முன்னர் அல்லது நியமனம் கிடைக்கபெற்ற பின்னர் தெரியவரும் பட்சத்தில் நஷ்டஈடு இன்றி எனது பொலிஸ் சேவை முடிவுறுத்தப்படும் என்பதற்கும் நான் கட்டுப்படுகிறேன் என்பதை அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:----.

8-509

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

*தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) மற்றும் தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016*

நீர்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பகுதி 3 சேவைத் தரத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவி :**

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்க்கும் தரம் |
|---|---|---|---|
| 1. | தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) | 122 | III ஆம் தரம் |
| 2. | தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) | 13 | III ஆம் தரம் |

1.2 **பதவிக்குரிய கடமைகளின் தன்மை :**

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 1. | தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளரின் கண்காணிப்பின் கீழ் ஒதுக்கப்படும் செயற்பாடுகள் : |
| | | * இத்துறையில் புதிய நிர்மாணங்கள், விஸ்தரித்தல் மற்றும் திருத்த வேலைகளை மேற்பார்வை செய்தல்.<br>* நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட தரத்திற்கிணங்க அத்தகைய நடவடிக்கைகளின்போது வழங்கப்படும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.<br>* உரிய துறையில் நீர்ப்பாசனம் மற்றும் உயர்த்தல் நீர்ப்பாசனம், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற திட்டங்களில் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளை மேற்பார்வை செய்தல்.<br>* நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய உயர்த்தல் நீர்ப்பாசனம், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் உவர் நீர் தடுப்புத் திட்டம், கட்டடம், பாதைகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு பற்றி கவனமாக இருத்தல் மற்றும் பாதுகாத்தல். |
| 2. | தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) | இயந்திரவியல் வேலைத்தளத்திற்கு பழுதுபார்த்தலுக்காக கொண்டுவரப்படும் வாகனங்களைப் பொறுப்பெடுத்தல்.<br>இயந்திரவியல் பிரிவுக்கு நியமிக்கப்படும் கனிஷ்ட ஊழியர்களின் கடமைகளைக் கண்காணித்தல் |

2. **ஆட்சேர்க்கும் முறை :**

2.1 நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள தொகைக்குச் சமனான தொகையை நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது, விண்ணப்பதாரர்களின் உடல் ரீதியான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப் பார்க்கப்படுவதோடு அதற்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் உப பிரிவு 1 இற்கிணங்க ரூபா 29,840 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 48,890 (MTI-2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இற்கிணங்க 2016.01.01 ஆந் திகதியிலிருந்து 2016.12.31 ஆந் திகதி வரை ஆரம்ப சம்பளமான ரூபா 17,508 மற்றும் ரூபா 9,831 கொடுப்பனவும் உரியதாகும்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

4.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது.

4.2 நியமனம் 3 வருடங்களுக்கு தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும். தாக்சன சகாயக்க III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 3 வருடத்திற்குள் ஆட்சேர்த்தல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.3 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கிணங்க பதவியில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும்.

4.4 அரச சேவை ஆணைக்குழுவின் சேவைத் திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு வயது 18 இற்குக் குறையாமலும் 35 இற்கு கூடாமலும் இருக்க வேண்டும்.

6. **தேவையான தகைமைகள் :**

6.1 *கல்வித் தகைமைகள்*.- கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

6.2 *தொழில்சார் தகைமைகள்*.- தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்).- மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருட பகுதி நேர தேசிய தொழில்நுட்ப சான்றுப்பத்திர (சிவில்) கற்கை நெறியில் சித்தியடைந்து உரிய சான்றிதழைப் (NCT - civil) பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அதற்குச் சமமான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

தாக்சன சகாயக்க (இயந்திரவியல்).- மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருட பகுதி நேர தேசிய தொழில்நுட்ப சான்றுப்பத்திர (இயந்திரவியல்) கற்கை நெறியில் சித்தியடைந்து உரிய சான்றிதழைப் (NCT - Mechanical) பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அதற்குச் சமமான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

6.3 பௌதீக தகைமைகள்.- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

6.4 (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்துத் தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

7. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் அது பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. **பரீட்சையின் செயற்திட்டம்.**- பரீட்சையானது இரு பாடங்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| வினாப்பத்திரம்/ பாடப்பரப்பு | காலம் | புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (1) மணித்தியாலம் | 100 | 40 |
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | ஒரு (1) மணித்தியாலம் | 100 | 40 |

8.1 பரீட்சைக்கான பாடப்பரப்பு :

(i) *நுண்ணறிவுப் பரீட்சை.*- தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) மற்றும் தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) பதவிகளுக்காக :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை |

(ii) *பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை.*- தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) பதவிக்காக :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | அடிப்படைக் கணித அறிவு மற்றும் அடிப்படை சிவில் பொறியியல் அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாக்களிலிருந்து இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும். |

தாக்சன சகாயக்க (இயந்திரவில்) பதவிக்காக :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | அடிப்படைக் கணித அறிவு மற்றும் அடிப்படை இயந்திரவியல் பொறியியல் அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாக் களிலிருந்து இவ்வினாப்பத்திரம் அமையப் பெறும். |

8.2 இப்பரீட்சை 2016, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு நகரில் மாத்திரம் நடாத்தப்படும். இப்பரீட்சையைப் பிற்போடுதல் அல்லது இரத்துச்செய்தல் பற்றிய இறுதித் தீர்மானம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

9. **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் :**

9.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கிணங்க செ. மீ. 21 x 19 (A4) அளவிலான கடதாசியை இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 6 வரையான தலைப்புகள் 1 ஆம் பக்கத்திலும், இலக்கம் 7 தொடக்கம் 11 வரை 2 ஆம் பக்கத்திலும், இலக்கம் 12 தொடக்கம் 14 வரை 3 ஆம் பக்கத்திலும், இலக்கம் 15, 4 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

9.2 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாகவும் அரச கூட்டுத்தாபன, மாகாண சபைகளில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரினூடாகவும் குறிப்பிட்ட தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

9.3 விண்ணப்பங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

9.4 குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

9.5 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

9.6 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

9.7 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்) பதவிக்கு ஆட்சேர்த்தல் அல்லது தாக்சன சகாயக்க (இயந்திரவியல்) பதவிக்கு ஆட்சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுக.

9.8 விண்ணப்பப்பத்திரத்தில் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படை அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 தரத்திற்குரிய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்ட மாகாண அல்லது அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவியையுடையவர்கள் போன்றவர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9.9 இந்த வெற்றிடத்தை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடத்தில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுப்பது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

10. **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்.**- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழே காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 7.

11. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரர் பரீட்சை நிலையத்தில் பரீட்சை நிலைய உத்தியோகத்தரிடம் தனது அனுமதி அட்டையைக் கையளிக்க வேண்டும். தனது அனுமதி அட்டையைக் கையளிக்காத விண்ணப்பதாரர் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

12. **விண்ணப்பதாரரின் ஆள் அடையாளம்.**- பரீட்சை நிலையத்தில் தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை நிலைய உத்தியோகத்தர் திருப்தியடையக்கூடியவாறு விண்ணப்பதாரர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

பொறியியலாளர் எஸ். எஸ். எல். வீரசிங்க,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
2016, யூலை 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் தாக்சன சகாயக்க (நீர்ப்பாசனம்/ இயந்திரவியல்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016

(அலுவலக உபயோகத்திற்கு)

1. விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

   சிங்களம் - 1
   தமிழ் - 2

   (உரிய கட்டத்திற்குள் எழுதவும்.)

2. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :----.
   (ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

3. முதலெழுத்துக்களுடன் பெயர்- திரு./ திருமதி/ செல்வி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (உதாரணம் : PERERA, A. B. C)

   3.1 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. ஆண்/ பெண் :
   ஆண் - M
   பெண்- F

   (உரிய கட்டத்திற்குள் எழுதவும்.)

6. நிரந்தர முகவரி :

   (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   6.1 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
   (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

7. தொலைபேசி இலக்கம் :

   நிலையான தொலைபேசி :
   கையடக்கத் தொலைபேசி :

8. வதிவிடம் :

   8.1 வதிவிட மாவட்டம் :----.
   8.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.

9. குடியியல் நிலை :
   திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2

10. பிறந்த திகதி :

   வருடம் மாதம் திகதி

   10.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது (2016.08.29) :

   வருடங்கள் மாதங்கள் நாட்கள்

11. கல்வித் தகைமைகள் :

11.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :
முதலாம் அமர்வு :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

11.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :
இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

12. தொழில்சார் தகைமைகள் :

| மேற்கொண்டுள்ள கற்கைநெறி | வழங்கிய நிறுவனம் | கற்கைநெறிக்கான கால எல்லை | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

................................... ஆகிய நான் இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகிறேன். நான் அரச சேவையில் இருந்து விட்டுச்சென்ற அல்லது செயற்திறமையற்றவர் என்ற வகையில் சேவையிலிருந்து இளைப்பாறச் செய்யப்பட்டவர் அல்ல எனவும், பதவியை விட்டுச்சென்றவர் எனக் கருதப்படுபவரும் அல்ல என உறுதி கூறுகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏதாவது பொய்யாக அல்லது தவறாக நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் நாட்டின் எப்பிரதேசத்திலும் நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றவும் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்தவர் எனவும், அவர் ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 13 ஆம் பிரிவின்கீழ் பையொப்பமிட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை இடவும்.)
திகதி :----.

15. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :
(அரசாங்க/ மாகாண சபையில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)
திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவர் ....................................... சேவையிலுள்ள ...... ................................................. பதவியை வகிக்கின்றார் எனவும், அவர் மேலே சமர்ப்பித்துள்ள தகவல்கள் சாரியானது எனவும் உறுதியளிக்கின்றேன். இப்பதவிக்காக இவர் தெரிவுசெய்யப்பட்டால் ................................ சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் மேலும் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை.

திகதி :----.

8-297/ 2

---

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

### நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற உரை பெயர்ப்பாளர் (தரம் III) பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குரிய நீதிமன்ற உரை பெயர்ப்பாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு (சிங்களம்/ தமிழ் அல்லது சிங்களம்/ ஆங்கிலம் அல்லது தமிழ்/ ஆங்கிலம்) உரைபெயர்ப்பாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய கொடுப்பனவுக் குரியது.

3. **வேதனத்திட்டம்**.- ரூபா 28,940 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 47,990

(2020.01.01 ஆந் திகதி வரை பொ. நி. சு. 03/ 2016 இல் II ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி கொடுப்பனவு செலுத்தப்படும். 2016.01.01 ஆந் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 16,980 மற்றும் ஏனைய கொடுப்பனவு ரூ. 9,859 ஆகும். அதற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படியும் செலுத்தப்படும்.

4. **வயது**.- விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

5. **கல்வித் தகைமைகள்**.- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் அல்லது ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் இரண்டிற்கும் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை தவிர்த்து) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத்திட்டத்தின்கீழ் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

(இ) வேறு சர்வதேச மொழியொன்றில் இருக்கக்கூடிய அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

6. உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்படும் விடயப் பரப்பிற்குட்பட்ட எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அப்பரீட்சை பெறுபேற்றுக் கமைய உரிய புள்ளி மட்டத்தினை அடைந்த விண்ணப்ப தாரிகள் நேர்முகத் தேர்வின் பின்னர் இப்பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் :

(i) *மாதிரி வினாப்பத்திரம்.*- மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) இலக்கியம் அல்லது பொது விடயங்கள் தொடர்பான கட்டுரை, சுருக்கம் எழுதுதல் மற்றும் விளங்கிக்கொள்ளல் தொடர்பான வேறு பரீட்சிப்பு, சொல்லகராதி தொடர்பான வினாக்கள், மரபுத் தொடர்கள் மற்றும் அதன் பாவனை மற்றும் பிழை திருத்தம் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். (இவ்வினாப்பத்திரம் கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையின் தரத்திற்கு ஒத்ததாயிருக்கும்.)

(ii) *மொழிபெயர்ப்பு.*- இவ்விடயப்பரப்பு மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

(அ) சிங்கள மொழியினை, தமிழ் மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல் ;

(ஆ) தமிழ் மொழியினை, சிங்கள மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல் ;

(இ) ஆங்கில மொழியினை, சிங்கள மொழிக்கு அல்லது தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல்.

(பரீட்சார்த்திகளினால் இலக்கிய உரைப் பகுதி, பொது விடயங்கள் தொடர்பான உரைப்பகுதி, உத்தியோகபூர்வ அறிக்கை யில் அல்லது ஆவணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட உரைப்பகுதி, பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கம் அல்லது அறிக்கை யொன்று மொழிபெயர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.)

பரீட்சார்த்திகள் தமது தகைமைக்கு ஏற்ப மேலே 6 (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு வினாபத்திரங்கள் இரண்டிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். மொழிபெயர்ப்பு வினாப் பத்திரங்கள் இரண்டினைத் தெரிவு செய்யும் போது மேலுள்ள 1 ஆம் பந்திக்கு அமைவாக பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய மொழிகள் இரண்டினை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மொழிமாற்றம் செய்யக்கூடிய வகையில் தெரிவுசெய்ய வேண்டும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் கால எல்லையாக இரண்டு மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

**குறிப்பு**.- விடைத்தாள்களில் காணப்படும் தெளிவின்மை, எழுத்துப் பிழைகள் என்பவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

7. சேவைக்கு உள்வாங்கப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைத் தீவின் எப்பாகத்திற்கும் சென்று சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும்.

8. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணபப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து அனுப்ப வேண்டும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது நிர்வாக நடவடிக்கைகளுக்காக மீளளிக்கப்படாத ரூ. 500 இனை நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் பெயரில் மக்கள் வங்கியின் டாம் வீதி கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039 என்ற கணக்கில் வைப்பிலிட்டு பெற்ற வைப்புச்சீட்டினை விண்ணபப்படிவத்தில் உள்ள உரிய கூட்டினுள் ஒட்டவும்.

9. விண்ணப்பப்படிவங்கள் 2016.09.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வகையில், “செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12” எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எழும் சிக்கல்கள் அனைத்திற்கும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பிரதீப் ஜயதிலக,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2016, யூலை 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவைகள் ஆணைக்குழு**

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற உரை பெயர்ப்பாளர் (தரம் III) பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

சுட்டெண் :

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**கவனிக்க.-** விண்ணப்பப்படிவம் உண்மையான தகவல்களைக் கொண்டு தெளிவான முறையில் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்பப்படல் வேண்டும். இலக்கம் 1 இலிருந்து 10 வரையான விடயங்கள் முதல் பக்கத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். உரிய கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ----.

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவாக ஆங்கிலத்தில் எழுதவும்) :----.

2. பால் நிலை : ஆண்/ பெண்

3. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :----.

4. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலத்தில்) :----.

5. வசிக்கும் மாவட்டம் :----.

6. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. (அ) பிறந்த திகதி :----.
(ஆ) விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

9. விண்ணப்பிக்கும் உரைபெயர்ப்பாளர் பதவி :
(1) சிங்களம் - தமிழ்
(2) சிங்களம் - ஆங்கிலம்
(3) தமிழ் - ஆங்கிலம்
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

10. தோற்றுவதற்கு உத்தேசிக்கும் மொழி வினாப்பத்திரம் :
(i) 1. சிங்களம்
2. தமிழ்
3. ஆங்கிலம்
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

மொழிபெயர்ப்பு

(ii) 1. சிங்கள மொழியை, தமிழ் மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல் :
2. தமிழ் மொழியை, சிங்கள மொழிக்கு அல்லது ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்தல் :
3. ஆங்கில மொழியை, சிங்கள மொழிக்கு அல்லது தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல் :

(தோற்றும் இரு மொழிபெயர்ப்பு வினாப்பத் திரங்களுக்கு முன்னால் உள்ள கூடுகளில் ( ✓ ) அடையாளமிடவும்.)

11. அரச சேவையில் பணியாற்றுபவரெனின்,

(i) அமைச்சு/ திணைக்களம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :----.
(iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iv) அப்பதவிக்கு நிரந்தரமாக்கப்பட்ட திகதி மற்றும் கடித இலக்கம் :----.
(v) அலுவலக முகவரி :----.

12. தகைமைகள்.- கல்வித் தகைமைகள் (ஒவ்வொரு பரீட்சையினதும் பெறுபேறுகளை சுட்டெண்களுடன் வேறு வேறாக குறிப்பிடவும்.) :

(அ) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறு :
வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறு :
வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(இ) வேறு ஒரு சர்வதேச மொழியொன்றில் இருக்கக் கூடிய அறிவு தொடர்பான விபரங்கள் :----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியினால் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி உரிய தொகையினை வைப்பிலிட்டு பெற்ற வைப்புச்சீட்டினை அகற்ற முடியாத வகையில் இங்கே ஒட்டவும் :

| |
|---|
| |

மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் உண்மை யானவை எனவும், இப்பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றுவதற்கு சம்மதிக்கின்றேன் எனவும் உறுதிகூறுகின்றேன். மேற்குறிப்பிட்டவற்றில் யாதேனும் ஒரு தகவலேனும் உண்மைக்குப் புறம்பானது அல்லது பிழையானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் தெரியவருமாயின் அக்காரணத்திற்காக நான் இப்பதவிக்கு தகைமையற்றிருப்பதற்கும் இப்பதவிக்கு நியமனம் பெற்ற பின்னர் அத்தவறு தெரியவருமாயின் எவ்வித நட்ட ஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதனையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்று**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் பணிபுரிவதுடன் அவரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மை யானவை எனவும், மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
உத்தியோகபூர்வ இலச்சினை :----.
திகதி :----.

8-365

---

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில்/ தூதரக அலுவலகங்களில் உள்நாட்டு தேர்வு அடிப்படையில் தன் உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை - 2015 (2016)

### Limited Competitive Examination for filling vacancies in the Home Based Personal Assistants' Posts in Sri Lanka Missions Abroad - 2015 (2016)

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை, மாகாண அரசாங்க சேவை மற்றும் உள்ளூராட்சி அரசாங்க சேவை மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் /அரசாங்க வங்கிகள் மற்றும் நியதிச்சட்ட முறையான சபைகள் போன்ற ஓரளவு அரசாங்க சார்புடைய தாபனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆங்கில சுருக்கெழுத்து மற்றும் கணினி பிரயோக ஆற்றல்கள் உடையவர்களிடமிருந்து இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்நாட்டு தேர்வு அடிப்படையில் தன் உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகவுத்திறன் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டு மென்பதுடன் விண்ணப்பதாரர் திருமணமான வராகின் அவரது வாழ்க்கைத் துணையும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரசாங்க சேவை மற்றும் உள்ளூராட்சி அரசாங்க சேவைகளில் உள்ளவர்கள் 57 வயதிற்கு மேற்படாத வயதுடையவர்களாகவும் ஆங்கில சுருக்கெழுத்து மற்றும் கணினிப் பிரயோகத்தில் ஆகக் குறைந்தது நிரந்தரமானதும் தொடர்ச்சியானதுமான 05 வருட காலச் சேவையைப் பூர்த்தி செய்தவர்களாகவும் ஆங்கிலச் சுருக்கெழுத்திலும் கணினி பிரயோகங்களிலும் திறமையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) தற்பொழுது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

(ii) இலங்கைத் தூதரகங்களில் முன்னர் பணிபுரிந்து திரும்பி வந்துள்ளவர்கள் பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் தங்களுடைய இறுதி நியமனத்தைப் பூர்த்தி செய்ததன் பின் இலங்கைக்குத் திரும்பி வந்து ஆகக் குறைந்தது 12 மாதங்கள் இலங்கையில் தங்கியிருந்திருப்பின் அவர் களுடைய இறுதி நியமனம் பூர்த்தி செய்யப்பட்ட அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

(iii) 02 (ஆ) வின் கீழ் குறிப்பிடப்பட்ட சேவைகளில் ஒப்பந்த அடிப்படையில் அல்லது அமய அடிப்படையில் அல்லது தற்காலிக அடிப்படையில் சேவை புரிப வர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவராவர்.

3. **தேர்வு முறை :**

3.1 விண்ணப்பதாரர்கள் ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றும்படி கோரப்படுவர். பரீட்சை ஆங்கில மொழிமூலத்தில் மட்டுமே கொழும்பில் நடைபெறும். சுருக்கெழுத்துப் பரீட் சைக்கான வேகம் நிமிடத்திற்கு 60 சொற்களாகும். ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். 40 அல்லது அதற்கு மேற்பட்ட வீதமான புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும் எழுத்துமூலப் பரீட்சையில் மேற்கூறப்பட்ட

புள்ளி மட்டத்தை போதிய எண்ணிக்கையில் விண்ணப்பகாரர்கள் பெறத் தவறும் பட்சத்தில் விண்ணப்பகாரர்களின் வெட்டுப்புள்ளி மட்டம் மீதான இறுதித்தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

3.2 எழுத்து மூலப் பரீட்சையில் திறமை அடிப் படையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்ப தாரிகள் நேர்முகப்பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப் படுவர். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்ப தாரர்களின் தகவுத்திறன் மற்றும் அவர்களின் விடயத்தில் அத்தாட்சியாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரிபார்த்துக் கொள்ளப்படும். நேர்முகப்பரீட்சை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப்படும். நியமனம் வழங்குதல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அவரது தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

3.3 பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

3.4 எழுத்துப் பரீட்சையில் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் திறமை ஒழுங்குவரிசை அடிப்படையில் தயாரிக்கப்படும் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப் படும். அத்துடன் ; பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும். அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப் படும்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இணைத்துக் கொள்வதன் பொருட்டு கோரிக்கையொன்று விடுக்கப்படுமிடத்து அந்த விண்ணப்பதாரர்கள் உரிய திகதியில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளுதல் வேண்டும். உத்தியோகத்தரொருவர் அவ்வண்ணம் செய்யத்தவறுமிடத்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அதைப்பற்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும். உரிய திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடமை யாற்றுவதற்கு வரத்தவறுமிடத்து அவர்கள் நியமனம் பெறுவதற்குத் தகைமையடையவில்லை எனக்கருதப்பட்டு இவ்விடயம் பற்றி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு தாங்கள் நியமனத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்களா அல்லது ஏற்றுக் கொள்ளவில்லையா என்பதைப் பற்றி அறிவித்தல் வேண்டும். அவ்வண்ணம் செய்யத்தவறுமிடத்து விண்ணப்பகாரர் நியமனத்தை ஏற்றுக்கொள்ள வில்லை எனக்கருதி அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. பதவிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 (அ) தெரிவாகும் உத்தியோகத்தவரொருவர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகமொன்றுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டதொரு காலப்பகுதிக்கு கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலான இத்தொடக்க சேவைக்காலப்பகுதியில் அவருடைய வேலையும் நடத்தையும் அதிருப்திகரமானவைகளாகக் காணப் படுமிடத்து அவருடைய தெரிவு இரத்துச் செய்யப்படலாம். இந்த அமைச்சின் தேவைப் பாடுகளின் பிரகாரம் இந்த அமைச்சிலுள்ள சேவைக்காலப்பகுதி மாற்றப்படலாம்.

(ஆ) அந்தந்தத் தூதரகங்களின் தேவைப்பாடு களின் அடிப்படையில் உத்தியோகத்தரின் தகுதி மற்றும் (வெளிநாட்டு மொழி ஆகியவற்றில்) திறமை ஆகியவற்றின் அடிப்படையில் நியமனம் வழங்குதல் தீர்மானிக்கப்படும். இப்படியான நியமனங் களைத் தீர்மானிப்பதில் உத்தியோகத்தரின் தனிப்பட்ட தேவைகளை (பிள்ளைகளின் கல்வி என்பன போன்றவை) கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய கடப்பாடு எதுவும் அமைச்சிற்கு இல்லை. மேலும், தேர்வுப் பரீட்சை மூலம் பெறப்பட்ட சிறப்புத்திறமை ஒழுங்கமைப்பின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பிணிப்பு எதுவும் இவ்வமைச்சிற்கு இல்லை.

4.2 தெரிவாகும் உத்தியோகத்தர் ஒருவர் இலங்கைத் தூதரகமொன்றிற்கு நியமனம் பெறும் போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலா ளரினால் விதித்துரைக்கப்படுவதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் வழக்கமாக மூன்று வருடங்களுக்கு அங்கு சேவையாற்றுமாறு கோரப்படுவர் என்பதுடன் அவர் இதற்கேற்ப உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும். இச்சேவைக்காலப்பகுதி சேவையின் தேவைப்பாட்டைப் பொறுத்து நீடிக்கப்படலாம்.

4.3 அரசாங்க சேவையிலுள்ள (அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரசாங்க சேவை, உள்ளூராட்சிச் சேவை) உத்தியோகத்தர்கள் தெரிவாகுமிடத்து தற்பொழுது பெறும் சம்பள அளவுத்திட்டத்தைத் தொடர்ந்து பெறுவார்கள். மற்றவர்கள் ரூபா 15,610 ஐக் கொண்ட நிலையான மாதாந்த சம்பளத்தைப் பெறுவார்கள். இத்துடன் கூடுதலாக தற்போதுள்ள விதிகள், ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்தூதரகங்களில் சேவையாற்றும்போது அவர்களுக்கு ஏற்புடைத்தான வெளிநாட்டுப் படியொன்றும் வழங்கப்படும்.

4.4 தெரிவாகும் ஓர் உத்தியோகத்தர் வெளிநாட்டிலுள்ள இலங்கைத்தூதரகமொன்றிற்கு நியமனம் பெறும்போது அந்நாட்டிற்கு செல்வதற்கும் திரும்பி வருவதற்குமான விமானப் பிரயாணச் செலவுகளை அரசாங்கம் வழங்கும். அத்துடன் வெளிநாட்டிலான அவருடைய தங்குமிடச் செலவுகள் மற்றும் பிற படிகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அத்துடன் இச் சலுகைகள் அவரது வெளிநாட்டுச் சேவைக் காலத்தில் அவருக்கும் அவருடைய வாழ்க்கைத்துணைக்கும் அவரில் தங்கியுள்ள இரு பிள்ளைகளுக்கும் மட்டுமே வழங்கப்படும். (இந்த வாசகத்தின் நோக்கத்திற்காக தகுதியுடைய பிள்ளைகள் என்பது திருமணமாகாதவர்களும் இவரில் தங்கியுள்ளவர்களுமான 21 வயதிற்குட்பட்ட பிள்ளைகளைக் குறிக்கும்).

5. **விண்ணப்பிக்கும் முறை :**

5.1 அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா. விண்ணப்பப்படிவங்கள் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ-4 அளவிலான கடதாசியில் 1 தொடக்கம் 9 வரையான பகுதியை முதற் பக்கத்திலும் 10 தொடக்கம் 19 வரையான பகுதியை இரண்டாம் பக்கத்திலும் மிகுதியை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்படும்போது பரீட்சையின் பெயர் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கும் மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

**குறிப்பு**.- அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/ உள்ளூராட்சி சேவை ஆகியவற்றில் சேவை புரிபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவம் 1 ஐயும் பிற சேவையினர் மாதிரி விண்ணப்பப்படிவம் 2 ஐயும் பயன்படுத்தல் வேண்டும்.

மாதிரிப் படிவத்திற்கு அமைவாக இராதவைகளும் தேவைப்படும் விபரங்களைக் கொண்டிராதவைகளுமான விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவும் இன்றி நிராகரிக்கப்படும். எனவே, விண்ணப்பப் பத்திரத்தின் நிழற்படப்பிரதி ஒன்றை வைத்திருக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவை புரிவதற்குத் தகுதியுள்ளவரா என்பதையும் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை உடனடியாக விடுவிக்க முடியுமா என்பது பற்றியும் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்பது பற்றியும் திணைக்களத் தலைவரினால் வழங்கப்படும் புறக்குறிப்பொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், அ.பெ. இல. 1503, கொழும்பு' என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2016, செத்தெம்பர் 13 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும் படியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் உள்நாட்டு தேர்வு அடிப்படையில் தன் உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் கூடொன்றிற்குள் (2 செ.மீ x 2 செ.மீ.) ஆங்கில எழுத்து "P" தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்தப் பரீட்சை 2016, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை 2003-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு தீவின் எப்பகுதியிலாவது அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலோ விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் குறித்த இடத்திலுள்ள ஒரு விளிம்பில் இணைத்தல் வேண்டும். இயைபுள்ள இடத்தில் பற்றுச்சீட்டு இலக்கம், பணம் செலுத்திய

அஞ்சல் அலுவலகம், உப அஞ்சல் அலுவலகம், செலுத்திய திகதி மற்றும் செலுத்தப்பட்ட பணத்தொகை என்பவற்றைக் குறிப்பிடவும். காசுக்கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ பரீட்சைக் கட்டணங்களின் கொடுப்பனவிற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக் கட்டணங்கள் மீள வழங்கப்படமாட்டா. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருக்குமாறு விண்ணப்பகாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

7. சகல அம்சங்களிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டதென்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்கப்பட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கோரப்படுவர். எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டவுடன் இது பற்றிய அறிவித்தலொன்று பரீட்சைகள் திணைக்களத் தினால் பத்திரிகைகளில் வெளியிடப்படும். பத்திரிகை அறிவித்தலைத் தொடர்ந்து 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதிச் சீட்டைப் பெறாத விண்ணப்பதாரர் ஒருவர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும். இப்படியான விண்ணப்பதாரர்கள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை என்பதான கடிதத்துடன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பணம் செலுத்தியதிற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் பதிவு அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்பியதற்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் செய்ய வேண்டும் (கொழும்பைத் தவிர்ந்த வெளியிடத்திலிருந்து பெறப்படும் மேன்முறையீட்டின் விடயத்தில் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான பாக்ஸ் இலக்கமொன்றைக் குறிப்பிடல் வேண்டும்.)

பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக நீங்கள் உங்களது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொள்ள வேண்டும். பரீட்சை நடைபெறும் முதலாவது நாளிலேயே உங்கள் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிஅட்டை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

9. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையின் போது பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகு நிலையிலுள்ள கடவுச்சீட்டு என்பன மட்டுமே பரீட்சார்த்தியின் அடையாளத்தை நிருபிப்பதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

10. பரீட்சைக்கான அனுமதி அட்டை விண்ணப்பதாரருக்கு வழங்குவதன் மூலம் பரீட்சார்த்தி பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பெற்றுள்ளார் எனக் கருதப்படலாகாது.

11. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது குறிப்பிடப்படும் பரீட்சார்த்தியின் பதவிப் பெயர் மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல தொடர்பாடல்களுக்கும் இயைபுள்ளவைகளாக்கப்படுமென்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

12. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைமுறைகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டவர்களாவர். மேலும் இவ்விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் எந்தத் தண்டனைக்கும் உட்படுத்தப்படுவர்.

13. இப்பரீட்சையில் தகைமையடைந்த பரீட்சார்த்திகளி லிருந்து ஏற்கனவேயுள்ள நிலவுகின்ற சகல வெற்றிடங் களையும் அவற்றில் ஒரு பகுதியையும் நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் பற்றி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகவிருக்கும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் வாசகத்தில் ஏதேனும் முரண்பாடு இருக்குமிடத்து சிங்கள மொழியிலான வாசகமே மேலோங்கிய நிலையிலிருக்கும்.

சித்ராங்கனி வாகீஸ்வர,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
த.பெ.583,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2016, யூலை 21.

மாதிரி விண்ணப்பப்படிவம் இல. 1

**வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்நாட்டுத் தேர்வு அடிப்படையில் தன் உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2015(2016)**

(அரசாங்க /மாகாண அரசாங்கசேவை /உள்ளூராட்சிச் சேவைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

Application for post of home Based Personal Assistants in Sri Lanka Missions Abroad- 2015(2016) (only for Application from Public / Provincial Public/ Local Govt. Services)

**பகுதி - அ**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) கடைசிப் பெயரை முதலில் இட்டு பிற பெயர்களின் முதல் எழுத்துக்களை முடிவில் இடவும்: (ஆங்கில பெரிய எழுத்தில்) (உதா: GUNAWARDHANA H. M. S. K.) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

2. முகவரி :

(i) உத்தியோகபூர்வ (ஆங்கில மொழியில்) :----.

(ii) சொந்த (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----. (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)

(iii) தொலைபேசி இல. :----.

3. (i) பால் :
பெண் - 1
ஆண் - 0
(பெட்டிக்குள் இயைபுள்ள எண்ணைக் குறிப்பிடுக)

(ii) தேசிய அடையாள அட்டை இல. :

(iii) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ?

திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2
(பெட்டிக்குள் இயைபுள்ள எண்ணைக் குறிப்பிடுக)

5. திருமணமானவராயின் வாழ்க்கைத் துணையின் பெயரும் தேசிய இனமும் :----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்களும் பிறந்த திகதியும் வயதும் :----.

7. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் தொழில் விபரம் :

(அரசாங்க உத்தியோகத்தராகவிருப்பின் முழுவிபரம் தருக) :----.

8. கல்வித் தகைமைகள் (மொழி மூலம் உட்பட) :----.
9. அரசாங்க/ மாகாண அரசாங்க/ உள்ளூராட்சித் துறையின் கீழான முதல் நியமனத் திகதி :----.

10. உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

11. தற்போதைய தரமும் அதில் சேர்ந்த திகதியும் :----.

12. தற்போதைய வருடாந்தச் சம்பளம் :----.

13. தற்போதைய கடமைகளின் தன்மை :----.

14. வேகம் :
(i) ஆங்கில சுருக்கெழுத்து :----.
(ii) ஆங்கில தட்டச்சு :----.

15. தேர்ச்சித் திறன்:
(அ) ஆங்கில மொழி :----.
(ஆ) சிங்கள/தமிழ் மொழி :----.
(இ) கணினி அறிவு :----.
(ஈ) பிற வெளிநாட்டு மொழிகள் :----.

16. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய (சேவையாற்றி இருப்பின்) வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் சேவைக் காலப்பகுதி :----.

17. பிற தகைமைகள் ஏதும் இருப்பின் :----.

18. குறிப்புகள் :-

சரியான பரீட்சைக் கட்டணத்தொகையின் கொடுப் பனவிற்காக அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பதாரர்கள் கீழே காட்டப்பட்டுள்ள கூட்டிற்குள் ஒட்டுதல் வேண்டும்.

(i) பற்றுச் சீட்டு இலக்கம் :----.
(ii) அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகம் :----.
(iii) திகதி :----.
(iv) செலுத்திய தொகை :----.

19. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

2016 ...................... ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளேன் என்பதையும் இக்காலப்பகுதியில் நான் (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லை என்பதையும் இவ்விண்ணப்பத்தில் தெரியப்படுத்தியுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் சரியானதும் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை நடைமுறைகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கீழ்ப்படிவேன் என நான் மேலும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பத்தாரரின் கையொப்பம்.

திகதி :----.

*பகுதி - ஆ*

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்
(திணைக்களத் தலைவரினால் நிரப்பப்படல் வேண்டும்)

நான், இவ்விண்ணபத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ------------------------------------------------ ------ என்பவர் இத்தாபனத்தில் ------------------------- ---------------------------- ஆம் திகதிக்கு முற்பட்ட ஐந்து ஆண்டுகளில் (அ) அவருடைய சகல சம்பளவேற்றங்களைப் பெற்றுள்ளார் எனவும் (ஆ) (எச்சரிக்கை நீங்கலாக) எந்த விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை எனவும் ஆராய்ந்து உறுதிப்படுத்தியுள்ளேன்.

இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என அத்தாட்சிப்படுத்துகிறேன். பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன எனவும் இத்துடன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இந்த உத்தியோகத்தர் தமது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டுள்ளாரென்பதையும் அவருடைய கையொப்பத்தையும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

இவ்வுத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியிலிருந்து அவரை உடனடியாக விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரையுடன்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திகதி :----.

மாதிரி விண்ணப்பப்படிவம் - 02

**வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்நாட்டுத் தேர்வு அடிப்படையில் தன் உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015(2016)**

(அரசாங்க / மாகாண அரசாங்கசேவை / உள்ளூராட்சிச் சேவைகளைச் சாராத ஏனைய விண்ணப்பதாரர்களுக்கானது)

Application for the post of home Based Personal Assistant in Sri Lanka mission Abroad – 2015(2016)
(For Applicants other than those from Public / Provincial Public/Local Government Services)

*பகுதி - அ*

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----. (உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) கடைசிப் பெயரை முதலில் இட்டு பிற பெயர்களின் முதல் எழுத்துக்களை முடிவில் இடவும் (ஆங்கில பெரிய எழுத்தில்) (உதா: GUNAWARDHANA H. M. S. K.) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

2. முகவரி :

(i) உத்தியோகபூர்வ (ஆங்கில மொழியில்) :----.

(ii) சொந்த (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)

(iii) தொலைபேசி இல. :----.

3. (i) பால் :
பெண் - 1
ஆண் - 0
(பெட்டிக்குள் இயைபுள்ள எண்ணைக் குறிப்பிடுக)

(ii) தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iii) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ?

திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2
(பெட்டிக்குள் இயைபுள்ள எண்ணைக் குறிப்பிடுக)

5. திருமணமானவராயின் வாழ்க்கைத் துணையின் பெயரும் தேசிய இனமும் :----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்களும் பிறந்த திகதியும் வயதும் :----.

7. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் தொழில் விபரம் :

(அரசாங்க உத்தியோகத்தராகவிருப்பின் முழுவிபரம் தருக) :----.

8. கல்வித் தகைமைகள் (மொழி மூலம் உட்பட) :----.

9. முடிவுத்திகதிக்கு முந்திய ஐந்து ஆண்டுகளில் விண்ணப்பகாரர் சேவையாற்றிய நிறுவனமும் சேவையாற்றிய காலப்பகுதியும் (சேவைச் சான்றிதழை இணைக்கவும்) :

| நிறுவனத்தின் பெயர் | பதவிப் பெயர் | காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

10. உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

11. தற்போதைய தரமும் அதில் சேர்ந்த திகதியும் :----.

12. தற்போதைய வருடாந்தச் சம்பளம் :----.

13. தற்போதைய கடமைகளின் தன்மை :----.

14. வேகம் :
    (i) ஆங்கில சுருக்கெழுத்து :----.
    (ii) ஆங்கில தட்டச்சு :----.

15. தேர்ச்சித் திறன்:
    (அ) ஆங்கில மொழி :----.
    (ஆ) சிங்கள/தமிழ் மொழி :----.
    (இ) கணினி அறிவு :----.
    (ஈ) பிற வெளிநாட்டு மொழிகள் :----.

16. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய (சேவையாற்றி இருப்பின்) வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் சேவைக் காலப்பகுதி :----.

17. பிற தகைமைகள் ஏதும் இருப்பின் :----.

18. குறிப்புகள் :

சரியான பரீட்சைக் கட்டணத்தொகையின் கொடுப் பனவிற்காக அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பதாரர்கள் கீழே காட்டப்பட்டுள்ள கூட்டிற்குள் ஒட்டுதல் வேண்டும்.

| |
|---|
| |

(i) பற்றுச் சீட்டு இலக்கம் :----.
(ii) அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகம் : ----.
(iii) திகதி :----.
(iv) செலுத்திய தொகை :----.

19. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

நான் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலே என்னால் வழங்கப் பட்டுள்ள விவரங்களில் எந்த விவரமும் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் காணப்படுமிடத்து நான் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் பொய்யானது அல்லது பிழை யானது என்பது நியமனம் செய்யப்பட்டதன் பின் காணப்படுமிடத்து நட்டஈடு எதுவும் வழங்கப்படாமல் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் நான், ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பான பரீட்சை நடைமுறைகள் தொடர்பில் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பில் அவரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் எனவும் உறுதியுரைக்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

## பகுதி - ஆ

தாபனத் தலைவரின் சான்றிதழ்
(தாபனத் தலைவரினால் நிரப்பப்படல் வேண்டும்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ----- ------------------------------------------------------------ ---------------------------------- என்பவர் இத்தாபனத்தில் ---------------------------------- ஆந் திகதியிலிருந்து சேவையாற்றுகின்றார் என்றும் இவரின் தொழில் மற்றும் நன்னடத்தை திருப்திகரமானது எனவும் இவ் அலுவலகத்தில் பேணப்படும் ஆவணங்களின் பிரகாரம் அவரினால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும் அவர் ------------------------------------------------ ஆந் திகதியன்று என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை இங்கே இணைத்துள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

இவ்வுத்தியோகத்தர் தெரிவாகும் பட்சத்தில் தற்போதைய பதவியிலிருந்து அவரை உடனடியாக விடுவிக்க முடியுமென்ப தையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
தாபனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8-413

## கல்வி அமைச்சின் கீழுள்ள தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை தொழில்நுட்பம் (MN - 03 - 2006A) பயிலுநர் தரம் மற்றும் தரம் III பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (MN-03-2006A) சேவை வகுதிக்குரிய பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்புடைய பதவி வெற்றிடங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2016.09.09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

1. பாதுகாப்பு உதவியாளர் (கட்டிடக் கலைஞர்/தொழில்நுட்பவியலாளர்) - 21
2. கட்டிட வரைவாளர் - 08
3. தொல்பொருளியல் படப்பிடிப்பாளர் - 07

2. **எழுத்துமூலப் பரீட்சை.**- இந்தப் பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது.

(i) உளச்சார்பு
(ii) பொதுப் பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவுப் பரீட்சை)

*பரீட்சைத் திகதி.*- இந்த பரீட்சை 2016 ஐப்பசி மாதம் கொழும்பு நகரில் நடைபெறும். இந்த பரீட்சையை பின்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்ட தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தமானது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையின் நியமனங்கள் கட்டுப்படுத்தப்படும் பொது நிபந்தனைகளுக்கும் 2012.08.21 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (MN - 03 - 2006A) பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் சகல நிபந்தனைகளுக்கும் அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இதுவரையில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களுக்கும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் (MN - 03 - 2006A) தரம் III பதவிக்கு அல்லது பயிலுநர் தரத்துக்கு நியமிக்கப்படுவர்.

3.1 தனக்கு வழங்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்க தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவியின் கடமையை அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது தவறும் விண்ணப்பதாரிகளின் நியமனம் இரத்துச்செய்யப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்த).**- ரூபா. 31,040 - 445 x 10 - 660 x 11 - 730 x 10 - 750 x 10 - ரூபா 57,550. (பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் பிரகாரம்)

நியமனத் திகதியிலிருந்து மூன்று 3 வருட காலப்பகுதியில் 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டலிலும் மற்றும் வகுப்பு II இற்கு நியமனம்பெற்ற திகதியிலிருந்து மூன்று 3 வருட காலப்பகுதியில் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டலிலும் வகுப்பு I இற்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து ஐந்து 5 வருட காலப்பகுதியில் 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டலிலும் சித்தியடைதல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 5 வருடங்கள் கழிவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 07/ 2007 இன் பிரகாரம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **உடற் தகைமைகள்.**- இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் உள ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.

6. **தகைமைகள்.**- இதற்காக தோற்றும் விண்ணப்பதாரிகள் :

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி நல்லொழுக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
(iii) 2016.09.09 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) ***தகைமைகள் :***

(அ) *கல்வித் தகைமைகள் :*

(i) *தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம்/ விலங்கியல்/ தாவரவியல்/ உயிரியல்/ இரசாயனவியல்/ பௌதீகவியல் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*மற்றும்*

(ii) *சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்தோடு*

(iii) *கணினி சொற்கள் அமைத்தல்/தட்டச்சு/சுருக்கெழுத்து பற்றிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட சான்றிதழ் பாடநெறி ஒன்றில் சித்தியடைந்திருத்தல்.*

* *மேற்படி கல்வித் தகைமைகளை மாத்திரம் நிறைவுசெய்துள்ளவிண்ணப்பதாரிகள் ஏற்புடைய சேவையின் பாடத்திட்டத்திற்கு அமைய பெற்றுக்கொள்ளும் இரண்டு வருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்து ஏற்புடைய பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் III வகுப்புக்கு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிமுறையில் அமர்த்தப்படுவர்.*

* *பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவதற்கு தவறும் பயிலுநர்களுக்கு 6 மாதங்களுக்கு மேற்படாத வகையில் தனது நியமனத்தை நீடித்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப் பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களது நியமனம் முடிவுறுத்தப்படும்.*

(ஆ) *தொழிற் தகைமைகள்.- பயிலுநர் தரம்*

* *தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பாதுகாப்பு உதவியாளர்) பதவி.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (மூன்று வருட பகுதிநேர பாடநெறி)*
* *கட்டிட வரைவாளர் பதவி.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் கட்டிட வரைவாளர் பற்றிய ஒரு வருட முழுநேர பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

* *தொல்பொருளியல் படப்பிடிப்பாளர்.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவருட முழுநேர அல்லது இரண்டு வருட பகுதி நேர தொழில் பயிற்சி பாடநெறியொன்றை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.*

**குறிப்பு :**

* *மேற்படி கல்வித் தகைமைகளுடன் (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகளை நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரிகள் ஏற்புடைய சேவையின் பாடத்திட்டத்திற்கு அமைய பெற்றுக்கொள்ளும் ஒரு வருட கோட்பாடு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்து ஏற்புடைய பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் III வகுப்புக்கு ஏற்புடைய சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பப் படிமுறையில் அமர்த்தப்படுவர்.*

* *பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவதற்கு தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதங்களுக்கு மேற்படாத வகையில் தனது நியமனத்தை நீடித்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப் பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களது நியமனம் முடிவுறுத்தப்படும்.*

(இ) *தொழிற் தகைமைகள்.*– தரம் III

* தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பாதுகாப்பு உதவியாளர்) மற்றும் கட்டிட வரைவாளர் பதவிகளுக்கு பின்வரும் தகைமைகளில் ஒன்றையேனும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(i) மொரட்டுவை பல்கலைக் கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசியபொறியியல் டிப்ளோமா

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I ஐ வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல்.

(vi) உயர் கல்வி அமைச்சுடனும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடனும் உசாவி கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லாவிதத்திலும் சமமானதென 3 ஆம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(vii) தேசிய தொழிற் திறன்கள் (NVQ) 5 அல்லது 6 மட்டத்திலான தகைமைகளைப் பெற்றிருத்தல்

* கல்வித் தகைமைகளுடன் (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிறைவுசெய்துள்ளவர்கள் III வகுப்புக்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிமுறையில் அமர்த்தப்படுவர்.

* தொல்பொருளியல் படப்பிடிப்பாளர் பதவி

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் புகைப்படம் எடுத்தல் பற்றி பெற்றுக்கொண்ட டிப்ளோமா.

(v) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 2016.09.09 ஆந் திகதி சகல தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.– விண்ணப்பப்படிவம் 22 - 29 மி.மி. ஏ4 அளவிலான காகிதத்தில் 1 தொடக்கம் 4.1 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் 4.2 தொடக்கம் 7 வரையிலான தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும் 8 தொடக்கம் 10 வரையிலான தகவல்களை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அத்தோடு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலிலுள்ள விண்ணப்பத்துக்கு அமைவாக உள்ளதா என்பதையும் விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இருக்காத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் கருத்திற்கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்பவத்திற்கு அமைய தயாரிக்க.

**குறிப்பு**.– தங்களது வசதி கருதி உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தொல்பொருளியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து (www.archaeology.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றும் மொழியில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(ii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு
(iii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(iv) வதிவை உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் சான்றிதழ்
(v) வேறு தொழில் சான்றிதழ்கள்
(vi) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்
(vii) தேசிய ஆள் அடையாள அட்டை

(இ) பரீட்சைக்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2016.09.09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம், தொல்பொருளியல் திணைக்களம், அமரர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (MN - 03 - 2006A) பதவிக்கு ஆட்சேர்த்தல் 2016" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 2,40,360 அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரைக்கு பொறுப்பான தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மத பீடங்களுக்கு பொறுப்பான மதத் தலைவர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் பூரணத்துவம் பெறாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பமொன்று தொலைந்துபோதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. **பரீட்சை முறை மற்றும் ஊடக மொழி**.- போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

குறிப்பு :

(i) விண்ணப்பதாரர் ஒருவர் மொத்த பரீட்சைக்கும் ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும்.
(ii) விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*பரீட்சைக் கட்டணம்*.-இந்தப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் ஒருவர் ரூபா. 1000.00 தொகையை தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைத்து நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

9. **தெரிவுசெய்யப்படும் முறை**.- பின்வரும் பாடத்திட்டத்திற்கு அமைய எழுத்துமூலப் பரீட்சையொன்று நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றும் விண்ணப்பதாரிகளிலிருந்து தகைமை பெறுபவர்கள் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அங்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளில் திறமை ஒழுங்குக்கு ஏற்ப அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. உளச்சார்பு | பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், அவரது உளப்பாங்கு பகுப்பாய்வு நிலமைகள், தீர்மானமெடுக்கும் ஆற்றல் போன்றவற்றை அளவிடும் வினாக்களைக் கொண்டிருக்கும். |

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடய அறிவுப் பரீட்சை) | (அ) கட்டிடவரைவாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பாதுகாப்பு உதவியாளர்) பதவி<br>(i) புராதன நினைவுச் சின்னங்கள் பற்றிய அடிப்படைஅறிவு<br>(ii) கட்டிடக்கலை பாதுகாப்பு அடிப்படை பற்றிய பொது அறிவு<br>(iii) மதிப்பீடுகளை திட்டமிடல்/மதிப்பீடுகளை தயாரித்தல் பற்றிய அறிவு<br>(iv) திட்டங்களை வரைதல் மற்றும் உபகரணங்கள் பற்றிய அறிவு/ நிர்மாண தொழில்நுட்பம் பற்றிய அறிவு<br><br>(ஆ) தொல்பொருளியல் படப்பிடிப்பாளர் பதவி<br>(i) அடிப்படை படப்பிடிப்பு உபகரணங்கள் பற்றிய அறிவு<br>(ii) படப்பிடிப்பின் தொழில்நுட்ப செயற்பாடுகள் பற்றிய அறிவு<br>(iii) படப்பிடிப்புக்கு ஏற்புடைய இரசாயனப் பொருட்கள் பற்றிய அறிவு<br>(iv) அச்சு காகித வகைகள் பற்றிய அறிவு<br>(v) படப்பிடிப்பு பற்றிய அடிப்படைகள் |

*பொது நேர்முகப் பரீட்சை*.- ஆட்சேர்ப்பு தகைமைகள் மற்றும் உடற் தகைமைகள் உறுதிப்படுத்தல் எதிர்பார்க்கப்படும்.

10. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக அமைய மாட்டாது.

*பரீட்சார்த்தியின் அடையாளம்*.- தாம் தோற்றும் சகல வினாப்பத்திரங்களின் போதும் விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது :

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பிழையான தகவல்களுக்கான தண்டனை**.- இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவாரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது முக்கியமான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

12. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுரையின்கீழ் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம்,
தொல்பொருளியல் திணைக்களம்.

அமரர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சின் கீழுள்ள தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை தொழில்நுட்பம் (MN - 03 - 2006A) பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

விண்ணப்பிக்கும் பதவி ஒன்றை மட்டும் குறிப்பிடுக

அலுவலக உபயோகத்திற்கு

1. 1.1 முழுப்பெயர் (திரு./ திருமதி/ செல்வி) (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலபெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :----.

2.2 நிரந்தர முகவரி : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால்நிலை : பெண் - 1/ ஆண் - 0

(உரிய இலக்கத்தைக் கூட்டிற்குள் குறிப்பிடுக.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

3.3 2016.09.09 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. தரம்) பரீட்சை :
சித்தியடைந்த வருடம் :----.

(i) சுட்டெண் :----.
(ii) பெறுபேறு :

| | பயின்ற பாடங்கள் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

4.2 க. பொ. த. (உ. தரம்) பரீட்சை :
சித்தியடைந்த வருடம் :----.

(i) சுட்டெண் :----.
(ii) பெறுபேறு :

| | பயின்ற பாடங்கள் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5. தொழிற் தகைமைகள் :

| நிறுவனம் | தொழிற் தகைமைகள் | பாடநெறிக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

6. தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? ஏற்புடைய கூட்டில் புள்ளடியிடுக :

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில் விபரத்தை குறிப்பிடுக :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன். சகல சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு ஒழுகுவேன் என்றும் குறிப்பிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி -------------------------------------------- என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ------------------------ --------------- ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :-----
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

10. திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் உறுதியுரை :

(அரசாங்க/ மாகாண அரசாங்க/ அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ---------------------------------------------- இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் -------------------- பதவியில் பணியாற்றி வருகிறார் என்று உறுதிப்படுத்துகின்றேன். அவரது விண்ணப்பத்தை சிபாரிசு செய்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----
பெயர் :-----
பதவி :-----
முகவரி :-----
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

8-283

---

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடபடிமுறையின் 7.2 பிரிவிற்கு அமைய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III தொடர்பில் நிலவிவரும் 12 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படவுள்ளதுடன் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சை நடாத்தப்படும் திகதி.-** இப்பரீட்சை 2016, நவெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சையை ஒத்திவைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கும் அதிகாரமுண்டு.

1. **நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதியும்.-** நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதியும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ கூட்டுறவுச் சங்க பதிவாளரினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கையான பதவி வெற்றிடங்களை அல்லது பதவி வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாதிருப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு அதிகாரமுண்டு.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) பொது வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பிரிவின் (IIஆ) முதற் பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொதுவான நிபந்தனைகளுக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பிற்கான நடபடிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்நிபந்தனைகள் தொடர்பில் இதன் பின் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைவாக தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்கள்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையது மாகும்.

(iii) இப்பதவி நியமனத்திற்கான தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள், நியமிக்கப் பட்ட நாளிலிருந்து மூன்று வருட நன்நடத்தைக் காலத்துக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(iv) நியமிக்கப்படும் பரீட்சார்த்திகள் அவர்களின் நன்நடத்தை காலம் பூர்த்தியாகும்போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் நிரந்தர சேவையில் அமர்த்தப்படுவார்கள்:-

(அ) வேலை, வேலைக்கு சமூகமளித்தல் மற்றும் நடத்தை திருப்திகரமாக காணப்படல்.

(ஆ) நன்நடத்தை காலம் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன் தடைத்தாண்டிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவி நியமனம் பெற்ற ஒரு வருட காலத்திற்குள் ''கூட்டுறவு அபிவிருத்தி'' பற்றிய 01 வருடத்திற்கு குறையாத மற்றும் 500 மணித்தியாலங்களுக்குக் குறையாத முழு நேர சான்றிதழ் பாடநெறியொன்றைக் கற்க வேண்டும். அப்பாடநெறியில் 03

மாதங்களுக்குக் குறையாத செயற்பாட்டுப் பயிற்சிகள் உள்ளடங்கும். இப்பாடநெறி தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்படுவதுடன் பாட நெறியின் இறுதியில் நிறுவன ரீதியான பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வோர் பாடம் தொடர்பிலும் 100 புள்ளிகளைக் கொண்ட 12 வினாப்பத்திரங்கள் வழங்கப்படும். சித்தியடைவதற்காக குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பரீட்சையில் சித்தியடையத் தவறினால் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நியமனம் முடிவுறுத்தப்படும்.

(v) நன்நடத்தைக் கால முடிவின்போது அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட முடியாதவிடத்து அவரின் சேவையை முடிவுறுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

(vi) ஆட்சேர்ப்பிற்குப் பின் ஐந்து (5) வருடங்களுக்குள் 2014, சனவரி 21 ஆந் திகதியுடைய 01/ 2014 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய அடுத்த மொழித் தேர்ச்சியை அடைந்துகொள்ள வேண்டும்.

(vii) தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பணிபுரியும் நிபந்தனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(viii) இந்நியமனமானது அரச சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதி பிரமாணக் குறிப்பு, அரசாங்கத்தினால் அடிக்கடி வெளியிடப்படும் கட்டளைகள் மற்றும் சட்டங்களுக்கும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கத்தின் பதிவாளரால் அடிக்கடி வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், ஆலோசனைகள் மற்றும் கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி MN -3-2016, மாதாந்த சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகின்றது. (31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - 57,550) ஆனால் குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும். (உதா : 2016.01.01 ஆந் திகதி முதல் 2016.12.31 ஆந் திகதிவரை ரூபா 18,212 அடிப்படை சம்பளமும் 9,794 ரூபா சீராக்கல் கொடுப்பனவுமாகும்.)

4. **சுகாதாரம் மற்றும் ஒழுக்க நடத்தை**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்யக்கூடிய பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

5. **தகைமைகள்**.- விண்ணப்பதாரிகள் சகலரும்,

(அ) இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி ஆகும்போது 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். 1998.09.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னைய திகதியில் மற்றும் 1986.09.09 ஆந் திகதி அல்லது அதற்கு பின் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறுவார்கள்.

(இ) நல்லொழுக்கம் உடையவராக இருக்க வேண்டும்.

(ஈ) பின்வரும் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(i) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு (2) பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ; அத்துடன்

(ii) பொருளியல், கணக்கீடு, வியாபார புள்ளிவிபரவியல், வணிகக் கல்வி, விவசாயம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுள் ஒன்றையேனும் உள்ளடக்கிய க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத் திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.)

(உ) பின்வரும் தொழிற் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(i) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் உயர் நிலை கணக்கீடு அல்லது கணக்காய்வு அல்லது ; முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா சித்தி அல்லது

(ii) கணக்காய்வு நிறுவனத்தின் (AAT) இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல் ; அல்லது,

(iii) அங்கீகாரம்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் கணக்கீடு அல்லது முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

(ஊ) விண்ணப்பதாரிகள் பதவிக்கான சகல தகைமைகளையும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி ஆகும்போது அல்லது அதற்கு முன் கட்டாயம் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

*6.* ***பரீட்சை கட்டணம்.***- இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 இல் வைப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அல்லது அதற்கு முன் இலங்கையில் உள்ள எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டு உங்கள் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டிவிடவேண்டும். அதன் நிழல் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருப்பது பயன்தரும். இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பி செலுத்தப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரைகள் அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை :**

(அ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய A4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். 1 முதல் 3 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும் 4 முதல் இருக்கும் பகுதிகள் அடுத்த பக்கங்களிலும் இருக்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக இல்லாத, குறித்த திகதிக்கு முன் பரீட்சை கட்டணம் செலுத்தப்படாத, சரியாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் குறைபாடுகள் காணப்படும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சரியான முறையில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படாததால் ஏற்படக்கூடிய நட்டத்தை விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழல் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்வது பயனளிக்கும்.

(ஆ) விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்பட வேண்டும்.

(இ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.09.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016" என தெளிவாக எழுதப்பட வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அரச சேவை/ மாகாண அரச சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தங்கள் திணைக்கள தலைவர்களின்/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும்.

(ஈ) சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்டில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பமொன்று காணாமல் போதல் அல்லது காலதாமதமாதல் பற்றிய எந்தவொரு முறையீடும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. அவர் பரீட்சைக்கு தோற்றுவது மற்றும் குறிப்பிட்ட பதவிக்கான தகைமையாக அமையாது. அவ்வாறு பரீட்சைக்கு தோற்றுவது அவரது தற்போதைய தகைமையினை பரீட்சித்து பார்க்கும் ஒரு விடயமொன்றாக மட்டுமே அமையும்.

(உ) விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்பும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாராக அது பற்றி பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பத்தின் மற்றும் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழல் பிரதியொன்றுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றை சரியான முறையில் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் வினவ வேண்டும். கொழும்புக்கு அப்பால் பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக தொலைநகல் இலக்கமொன்றையும் மேற்குறிப்பிட்ட விபரங்கள் அடங்கிய கோரிக்கை கடிதமொன்றையும் தொலைநகல் ஊடாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்து வினாவுதல் மிகவும் பயளிக்கும்.

(ஊ) பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்திலும் அனுமதி அட்டையிலும் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட

ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் கையொப்பம் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினாலும் ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் (ரூபா 2,40,360- அல்லது அதற்கு மேலான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச சேவையைச் சேர்ந்த அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தர பதவி உத்தியோகத்தர்) பௌத்த விகாரை விகாராதிபதி அல்லது மதத் தலைவர், வேறு மத நிலையமொன்றின் பொறுப்பாக அல்லது போற்றத்தக்க மதத் தலைவர் ஒருவர், முப்படையைச் சேர்ந்த பதவிநிலை அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அவர்களில் எவரேனும் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்.

8. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) சரியான விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகள் சகலருக்கும் பரீட்சை ஆணையாளரால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்தி தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன் அவ்வாறு தோற்றும் முதல் நாளில் தனது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையத் தலைவருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். தனது பரீட்சை அனுமதி அட்டையை முன்வைக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சையில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படாது.

(ஆ) பரீட்சார்த்திகள் சகலரும் பின்பற்ற வேண்டி சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணபப்தாரிகளுக்கு பரீட்சையில் கலந்துகொள்வதற்காக அனுமதி அட்டை வழங்கப் படுவதால் விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளாரென கருதப்பட மாட்டார்.

(ஈ) பரீட்சையை நடாத்தல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுவார். அந்த சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படும்.

9. **பரீட்சார்த்தியின் அடையாளம்.**- தான் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டப தலைவர் திருப்தியடையக்கூடிய வகையில் பரீட்சார்த்தி தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஆவணங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :

- ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
- குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தால் விநியோ கிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டு.

10. **பொய்யான தகவல்களை முன்வைத்தல்.**- ஒரு பரீட்சார்த்திக்கு தகைமைகள் இல்லையென உறுதிப்படுத்தப் பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியால் முன்வைக்கப்படும் விபரமொன்று அவர் பொய்யானதென தெரிந்தே முன்வைத்துள்ளதாக தெரியவந்தால் அல்லது ஒரு முக்கியமான விடயத்தை அவர் தேவையென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு இடமுண்டு.

11. **பரீட்சை முறை :**

(அ) இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைக் பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழியில் மட்டுமே பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற் குறிப்பிட்ட (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள "தகைமைகள் பெற்ற பரீட்சைகள்" என்ற பிரிவினால் கருதப்படுவது 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்று ஆகும்.

(ii) ஒரு பரீட்சார்த்தி தான் கலந்துகொள்ளும் பரீட்சை வினாப்பத்திரங்கள் சகலவற்றுக்கும் ஒரே மொழியில் பதில் எழுத வேண்டும்.

12. **பரிசோதிக்கும் முறை** :

(அ) பின்வரும் இரண்டு பாடங்கள் தொடர்பில் நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சை மூலம் மற்றும் பொது நேர்முகப் பரீட்சை மூலம் :

| | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|
| 1. விவேகப் பரீட்சை | 100 | 01 மணித்தியாலம் |
| 2. பொது அறிவு | 100 | 01 மணித்தியாலம் |

1. *விவேகப் பரீட்சை*.- பரீட்சார்த்தியின் சிந்திக்கும் தர்க்க ஆற்றல், பகுப்பாய்வு ஆற்றல், முடிவெடுக்கும் சக்தி, தீர்க்கும் ஆற்றல் தொடர்பான பல்லின மற்றும் குறுகிய பதிலளிக்கும் முறையிலான 50 வினாக்களைக் கொண்ட ஒரு வினாப்பத்திரம்.

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

2. *பொது அறிவு* :

(அ) தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளியல் மற்றும் அரசியல் பற்றிய அறிவு மற்றும்

(ஆ) தேசிய மற்றும் சர்வதேச கூட்டுறவு தத்துவம் மற்றும் வர்த்தகம் பற்றிய அறிவை ஆராய்வதற்கான 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட ஒரு வினாப்பத்திரம், எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ஆ) இப்பரீட்சை போட்டிப் பரீட்சையானபோதிலும் ஒவ்வோர் பாடத்திற்கும் வழங்கப்படும் புள்ளிகளில் நூற்றுக்கு நாற்பது (40%) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அழைப்பதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள் என்பதுடன் எழுத்துமூல பரீட்சையின் பின் அறிவிக்கப்படும் தினமொன்றில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பதாரியின் தகைமைகளை பரிசோதிப்பதற்காக மட்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அங்கு புள்ளிகள் வழங்கப்படாது.

13. **நியமனம் வழங்குவதற்காக தேரந்தெடுக்கப்படும் முறை**.- எழுத்துமூல பரீட்சையில் 2 வினாப்பத்திரங்களுக்கும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சில பரீட்சார்த்திகள் ஒரே அளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டிருந்தால் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கத்தின் பதிவாளரால் கடைசித் தீர்மானம் எடுக்கப்படும்.

14. 12(ஆ) பிரிவின் பிரகாரம் தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்று பட்டியல் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கத்தின் பதிவாளருக்கு வழங்கப்பட்டபின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் அல்லது பரீட்சை திணைக்களத்தின் www.results.exams.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைக்கப்படும்.

15. மேற்குறிப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்படாத விடயங்கள் தொடர்பில் எழும் பிணக்குகள் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கத்தின் பதிவாளரால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

டி. ஜீவநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும்
கூட்டுறவுச் சங்க பதிவாளர்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
2016, யூலை 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சையில் கலந்துகொள்ளும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(சம்பந்தப்பட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முழுப்பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதா : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துகளை இறுதியிலிட்டு பெயரை பின்பு குறிப்பிடவும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA H.M.S.K. )

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 பிரவேசப்பத்திரம் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் (பெண்/ ஆண்) :
பெண்-1
ஆண்-0
(சம்பந்தப்பட்ட இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4. பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2016.09.09 ஆந் திகதியின்போது வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த. (சா. தரம்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை இலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க.பொ.த. (உ. தரம்) பரீட்சை விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை இலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்று பெற்றிருப்பின்,

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் :----.
(iii) பரீட்சை இலக்கம் :----.

6. தொழிற் தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.

7. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத் தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?

ஆம் ☐ இல்லை ☐

(தொடர்புடைய கூட்டில் அடையாளம் இடுக)

ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக :

8. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் : ----.
(ii) பற்றுசீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்தப்பட்ட கட்டணம் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழல் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளவும்) |

9. விண்ணப்பதாரியின் உறுதிமொழி :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்யாவும் என்னுடைய அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் கௌரவத்துடன் தெரி வித்துக்கொள்கின்றேன். இங்குள்ள ஏதேனும் ஒரு பகுதி பூர்த்திசெய்யப்படாமை அல்லது பிழையாகப் பூர்த்திசெய்யப்படுவதால் ஏற்படக் கூடிய பாதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு இணங்கு கின்றேன். இங்குள்ள பகுதிகள் யாவும் சரியாக பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாகவும் உறுதியளிக் கின்றேன்.

(ஆ) எனது உறுதிமொழி பொய்யானதென உறுதிப் படுத்தப்படுமாயின், நியமனம் வழங்கப்படுவதற்கு முன் தகுதியற்றவராகவும் நியனம் வழங்கப்பட்ட பின் பதவிநீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாகலாம் என்பதை நான் அறிவேன்.

(இ) பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்படும் சட்டவிதிகளுக்கு உடன்படுவதாகவும் தெரிவிக் கின்றேன்.

(ஈ) இங்குள்ள எந்த விபரத்தையும் பின்பு திருத்த மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. (அ) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் ................................................. திரு./ திருமதி/ செல்வி எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் அவரால் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கான பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அவர் என் முன்னிலையில் ............................ ஆந் திகதி அவரின் கையொப்பத்தை இட்டதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அதிகாரியின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அதிகாரியின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(திகதி, முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

அரசாங்க சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தொடர்பில் திணைக்கள அதிகாரியின் சான்றுறுதி :

........................................................... திரு./ திருமதி/ செல்வி தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் ................... ............................ நிரந்தர/ தற்காலிக/ அமைய அடிப்படையிலானஅலுவலராக பணி புரிந்து வருவதாகவும் இந்த பதவி தொடர்பில் அவர் தேர்ந்தெடுக்கப்படுவார் ஆயின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் அறிவிக்கின்றேன்.

----,
அமைச்சின் செயலாளர்/ திணைக்கள அதிகாரி,
கையொப்பமும் திகதி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

8-390

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.